செ.வெ.எண்: 737 நாள்: 01.11.2019

# பொது மக்கள் புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைக்கும்பொழுது உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து உரிய அனுமதி பெற வேண்டும்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

பொது மக்கள் புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைக்கும்பொழுது உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து உரிய அனுமதி பெற வேண்டும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் உள்ளிட்ட அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் பயன்படுத்தாத நிலையில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகள் அனைத்தும் பாதுகாப்பான முறையில் மூடப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்கள் மற்றும் ஊடகம் மூலமாக வரும் புகார் அடிப்படையிலும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொது மக்கள் புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைக்கும்பொழுது உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து உரிய அனுமதி பெற்றும், அரசின் வழிகாட்டு நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ள பாதுகாப்பு விதிகளை பின்பற்றவும் தெரிவிக்கப்படுகிறது. திறந்தவெளி கிணறுகள் மூடப்பட்டிருந்தாலும் அவற்றின் அருகில் பொதுமக்கள் தாங்களோ, தங்கள் குழந்தைகளோ செல்லாதவாறு தற்காத்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், தற்போது பருவமழை பெய்து வருவதால், கண்மாய், ஏரி, குளம், குட்டை ஆகிய நீர் நிலைகள் விரைவாக நிரம்பி வருகின்றன. எனவே, பொதுமக்கள் தாங்களோ, தங்களது குழந்தைகளோ யாரும் நீர்நிலைகளின் அருகில் செல்வதையோ, குளிப்பதையோ தவிர்த்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**